# கொலையாளிகள்!

இந்நிலையில் அங்கே சிறிய சர்ச் ஒன்றைக் கட்டி விழா எடுத்து வந்திருக்கிறார் பவுலினா. இந்த விழாவிற்கு முன்பெல்லாம் பணம் கொடுத்து உதவும் சாம்சன், வீடு கட்டும் பிரச்சினைக்குப் பிறகு நிதியுதவி செய்வதை நிறுத்தினார். அப்போதும் இரு தரப் பிற்கும் கடும் சண்டை ஏற்பட்டது.

இப்படி இரு தரப்பிலும் ஈகோ கொதித்துக் கொண்டிருந்த நிலையில் பவுலினாவின் வீட்டை நோக்கிப் பார்க்கும் வகை யில் தன் வீட்டில் கேமரா பொருத்தினாராம் சாம்சன். இதுதான் கொலைத் திட்டத்திற்கான மூலக் கரு! 'நம்மை இந்த ஆள் விட மாட்டான் போலிருக்கிறது. இவனை முடித்துவிட வேண்டும்' என்று தன் பிள்ளைகள் மற்றும் உறவினர்களிடம் புலம்பியிருக் கிறார் பவுலினா.

இந்நிலையில் கொலைத் திட்டம் ரெடியானது. கொலையா ளிகள் வேறு யாரும் அல்ல! பவுலினா, அவரது இரு மகன்கள், ஒரு தம்பி, அவர்களின் நண்பர்கள்- அவ்வளவுதான்! ஆனால் கைதேர்ந்த கொலைகாரர்கள் போல் காரியத்தைக் கச்சிதமாக முடித்திருக்கிறார்கள். சாம்சன் வீட்டு வாசலில் காமிரா இருக்கி றது என்பதைத் தெரிந்து கொண்டதால், கொலையாளிகள் சிலர் தொப்பி அணிந்தார்கள். சிலர் ஹெல்மெட் போட்டுள்ளார்கள். இப்படி மாறு வேடத்தில் நின்று, வெளியில் சென்று வந்த சாம் சன், வீட்டு கேட்டைத் திறக்கும் போது வெட்டி வீழ்த்தியுள்ளார் கள். கொலை செய்தவரும், கொலையானவரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பது இதில் இன்னொரு முக்கியமான அம்சம்!

சாம்சனின் அம்மா சாம்சன் இருக்கும் வீட்டிலிருந்து நான்கு தெரு தள்ளி வசித்து வருகிறார். "இந்த இடத்தில் வீடு கட்ட ணுமா? இவருக்கு இருக்கிற வசதிக்கு சென்னையில் எங்கு வேண்டுமானாலும் வீடு கட்டிக் கொள்ளலாம். வீணாக சாராய வியாபாரியாக இருந்த பெண்ணிடம் மோதி இப்போது உயிரைப் பறி கொடுத்து விட்டாரே. இவர் குடும் பம்தான் தடுமாறப் போகிறது. ஒரு கொலைகாரியுடன் சண்டை போட்டு இப்படிப் போயிட்டாரே" என்று சாம்சனின் உறவினர் கள் கதறி அழுதது பரிதாபமாக இருந்தது.

இந்தக் கொலையில் அதிரடியாகக் களமிறங்கி அனைத் துக் குற்றவாளிகளையும் பிடித்து விட்டது சென்னை புறநக ரப் போலீஸ்! அதில் பவுலினாவும் அவரது மகனும் கோர்ட் டில் சரண்டர் ஆகி விட்டார்கள். அவர்களை கோர்ட் வளாகத் திலேயே பிடிக்க ஆதம்பாக்கம் இன்ஸ்பெக்டர் முயற்சி செய் தார். ஆனால் பவுலினாவை 'வழக்கறிஞர்' என்ற ஸ்டிக்கர் ஒட் டிய காரில் அழைத்து வந்து கோர்ட்டில் சரண்டர் பண்ணி விட்டார்கள். இருந்தாலும் போலீஸ் பவுலினாவை விடப் போவதில்லை. இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனை வரையும் விரைவில் போலீஸ் கஸ்டடி எடுக்கப் போகிறது. அது மட்டுமின்றி இவர்களை குண் டர் சட்டத்தில் அடைக்க வும் சீரியஸாக நடவடிக்கை எடுத்து வருகிறது. ▲


குடும்பத்தினருடன் சாம்சன்

ஆகிய இருவரையும் பிடித்து உள்ளே போட்டார் பெருங்களத்தூர் இன்ஸ்பெக்டர் ஜெயராஜ். அவர்கள் குண்டர் சட்டத்திலும் அடைக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலை யில் சூர்யா என்பவன் ஜெயிலுக்குள்ளிருந்து வெளியில் ஒரு ரௌடிக்குப் பேசியுள்ளான். அது வும் செல்ஃபோனில்! அப்போது, 'இன்ன நபரைப் போய் பார். அவர் ஆயுதம் தருவார். அதை எடுத்துக் கொண்டு அந்த ஊமமூர்த்தியைப் போடுங்கள். வெட்டிக் கொன்று விட்டு நேராக செங் கல்பட்டு போங்கள். அங்கு வழக்கறிஞரைச் சந்தியுங்கள். (வழக்கறிஞரின் பெயரைச் சொல்கிறான்) அவரிடம் 30000 பணம் கொடுங் கள். உங்களை நீதிமன்றத்தில் சரண்டர் பண்ண வைப்பார். உள்ளே (ஜெயிலுக்குள்) வந்துருங்க!' என்று ஜெயிலுக்குள் இருந்து பேசி னான்.

இப்படி ஒரு கொலைத் திட்டம் அரங்கேறப் போகிறது என்ற விஷயம் சென்னை புறநகரப் போலீஸ் கமிஷனர் ஜாங்கிட்டின் கவனத்திற்கு வந்தது. அவர் உடனே பெருங்களத்தூர் இன்ஸ்பெக்டரை களத்தில் இறக்கி விட்டார். மறுநாள் காலையில் அந்தக் கொலை அரங்கேறுவதாகத் திட்டம் போடப்பட்டதாம். ஆனால் விடியும் முன்பே அந்த ரௌடி கும்பலைத் தேடிக் கண்டு பிடித்து ஜீப்பில் ஏற்றினார் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயராஜ். அந்தோணி தலைமையிலான அந்த ரௌடி கும்பலில் 15 வயது சிறுவனும் ஒரு ரௌடியாக இருப்பதைப் பார்த்து போலீஸ் அதிர்ச்சியடைந்தது. இவர்கள் அனைவ ருமே இப்போது கம்பி எண்ணுகிறார்கள்.

பழிக்குப் பழி வாங்கும் கொலைகளைத் தடுக்கும் சென்னை புறநகரப் போலீஸின் முயற்சிகள் பலனளிக்கின்றன. அதே நேரத்தில் ஜெயிலுக்குள் இருந்து செல்ஃபோனில் கொலை பண்ண உத்தரவிடுவதும் தொடருகிறது. ஜெயிலுக்குள் செல்ஃபோனை இன் னும் முற்றிலும் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதையே இது காட்டுகிறது!

●